பக்கங்கள்:-17

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 18 | வெள்ளிக்கிழமை | 04.10.2024 | அதிர்வு 063 |
|---|---|---|---|---|---|

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் நியமனக் குழுவை அரசியல் குழுவும் ஏற்றது!

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்த தேர்தல் நியமனக் குழுவை கட்சியின் 06



# வரியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு தீர்மானம்

### சர்வதேச நாணய நிதியத்திடம் ஜனாதிபதி தெரிவிப்பு





அதிக வற் வரி மற்றும் வருமான வரியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக் குழுவினரிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 06

## 'பார் பெர்மிட்' பெற்ற அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியலை உடன் வெளியிடுங்கள்

### ஜனாதிபதியிடம் சுமந்திரன் நேரில் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் தொடர்பான தகவல்களை உடனடியாக வெளியிடுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேரில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மாலை ஜனாதிபதிக்கும் முன்னாள் எம்.பி. சுமந்திரனுக்கும் 06



புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று மாலை சந்தித்து விரிவாகப் பேசியிதுக்கின்றார்.

அச்சமயம் மதுபான சாலைகளுக்கான பெர்மிட்டுகள் முன்னைய ரணில் அரசின் கீழ் முறைகேடான முறையில் வழங்கப்பட்டமை குறித்து விரிவாகப் பேசப்பட்டது.

அந்த பெர்மிட்டுகள் யாருடைய சிபாரிசுகளில் வழங்கப்பட்டன என்ற விவகாரத்தை புதிய அரசு உடனடியாக வெளியிட வேண்டும் என்றும், காலம் தாமதிக்க, தாமதிக்க இந்த விடயத்தில் தற்போதைய அரசுத் தரப்புக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் மக்களுக்கு வலுக்கும் என்றும் சுமந்திரன் கூறியிருக்கின்றார். 06

# மத்திய வங்கியின் ஆளுநர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு இரத்து




இலங்கை மத்திய வங்கி ஆளுநர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் முன்னாள் ஆளுநர்கள் மற்றும் எதிர்கால ஆளுநர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 8 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம்

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகர் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை 8 சுயேச்சைக் குழுக்கள் செலுத்தியுள்ளன என்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் பதில் அரச அதிபருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நாளை (இன்று) 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.” – என்றார்.

# வெளிநாட்டுப் பிரஜையின் பணத்தை கொள்ளையிட்டவர்கள் சிக்கினார்கள்






(எஸ்.நிதர்ஷன்)

காணியை விற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வெளிநாட்டுப் பிரஜையின் ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபா பணம், கைத்தொலைபேசி மற்றும் கடவுச்சீட்டு என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் இருவரைக் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கீழுள்ள பொலிஸ் குழுவினர் யாழ். ஊரெழுப் பகுதியில் வைத்து அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் சண்டிலிப்பாய் பகுதியில் வைத்து இந்தத் துணிகர சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர்.

பணத்தைப் பறி கொடுத்தவர், சேந்தாங்குளம் பகுதியில் காணியை விற்றுவிட்டு தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களையும் சான்றுப் பொருட்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# ஐ.நாவின் இணைப்பாளர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியா குட்டாரஸின் வாழ்த்துச் செய்தியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட இணைப்பாளர், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் வழங்கி வைத்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் பண்பான தன்மைக்கும் வாழ்த்து தெரிவித்த இணைப்பாளர் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வரவேற்றார்.

மக்கள் எதிர்பார்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதால் எதிர்வரும் காலம் சவாலானதாக அமையுமென சுட்டிக்காட்டிய ஐ.நா.இணைப்பாளர் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்கு பாராட்டு தெரிவித்த மார்க் அண்ட்ரூ, அந்த முயற்சிகளுக்கு ஐ.நா தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

அதேபோல் சமூகத்தில் தேசிய சமாதானத்துக்கான புதிய அரசாங்கத்தின் பூர்வாங்க முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த வதிவிட இணைப்பாளர், ஒவ்வொரு தரப்பினருக்கு மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

அதேபோல் நாட்டுக்கு நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமெனவும் அவர் உறுதியளித்தார்.







# பொதுத் தேர்தல் முடிந்ததும் விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்




பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் வெகு விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் நிறைவடைந்ததும் அதற்கான திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கையூடாக அறிவித்துள்ளது.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதற்காக தமது அலுவலகம் கடமைப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் 22 ஆம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவிற்கமைய, சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 58 சுயேட்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக இதுவரை 58 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திகாமடுல்ல மற்றும் கொழும்பு தேர்தல் மாவட்டங்களிலிருந்து அதிகளவான சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

அத்துடன், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# இறப்பர் உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் திட்டம்



தேசிய இறப்பர் உற்பத்தியை 60 வீதமாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான மூலப்பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் பெண் பேசாலையில் கைதானார்!



(மன்னார்)

மன்னார் பேசாலை பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட – சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நேற்று வியாழக்கிழமை (03) மாலை பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது இந்தச் சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

30 பாக்கெட் வெளிநாட்டு சிகரெட்டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் அந்தப் பெண் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேற்படி பெர்மிட்டுகள் யாருடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரம்தான் இப்போது முழுமையாக உள்ளது, எந்த அரசியல்வாதியின் சிபாரிசில் அவை வழங்கப்பட்டன என்பதை பற்றிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்காக புலனாய்வு அடிப்படையில் தேடப்படுகின்றன என்று ஜனாதிபதி பதிலளித்திருக்கின்றார்.

பெரும்பாலான பெர்மிட்டுகள் வடக்கு பகுதிக்கு வழங்கப்பட்டிருப்பதால் அது யாருடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக வெளியிடுங்கள், அதை யார் சிபாரிசு செய்தார்கள் என்பதை எமது மக்கள் கண்டுபிடிப்பார்கள். அவ்வளவு துல்லியமாகக் கண்டுபிடிக்கக் கூடியவர்கள் என்று சுமந்திரன் ஜனாதிபதியிடம் கூறியிருக்கின்றார்.

புலனாய்வுத் தரப்பினரை விட இந்த விடயத்தில் வடக்கு மக்கள் மிகவும் 'ஷார்ப்' என்ற சுமந்திரனின் கருத்தை ஜனாதிபதி அனுரா குமார திசநாயக்க விசேடமாக கவனத்தில் எடுத்து புன்னகைத்தார் எனத்தெரிய வந்தது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் தமிழர்களின் அபகரிக்கப்பட்ட – ஆக்கிரமிக்கப்பட்ட – காணிகளை விடுவித்தல் ஆகியவற்றில் அரசு உறுதியாக இருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு இந்த விடயங்கள் முடிவுக்கு வரும் வகையில் தீர்வு காணப்படும் என்று சுமந்திரனிடம் உறுதி அளித்திருக்கிறார் ஜனாதிபதி.

கிழக்கில் மேய்ச்சல் தரைப் பிரச்சினை, கிழக்கு மாகாண பூர்வீக நிலங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் சூறையாடப்படுவது தொடர்பான விவகாரம், கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் சம்பந்தமான சர்ச்சை போன்றவற்றுக்கெல்லாம் புதிய அரசு நிறுவப்பட்டதுடன் தீர்வும் காணப்படும் என ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது உறுதி அளித்திருக்கிறார்.

---

## வரியால் பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீநிவாசன், சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி கலாநிதி பீற்றர் ப்ரூயர் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக் குழுவினர் நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களான பேராசிரியர் அனில் ஜயந்த மற்றும் துமிந்த ஹுலங்கமுவ உள்ளிட்ட இலங்கை பிரதான அதிகாரிகள் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்க இடையில் செயற்படுத்தப்படும் தற்போதைய திட்டம் குறித்து மீளாய்வு செய்யப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் நோக்கங்களுடன் கொள்கையளவில் அரசின் பரந்த உடன்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, மக்கள் மீதான சுமையை அகற்றும் மாற்று வழிகளின் ஊடாக அந்த நோக்கங்களை அணுகுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

அதிக வற் வரி மற்றும் வருமான வரியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான தற்போதைய ஜனாதிபதியின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், இலங்கை அரசால் முன்மொழியப்பட்ட மாற்று அணுகுமுறைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் உடன்பட்டனர்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத்திட்டத்தின் மூன்றாவது மீளாய்வை ஆரம்பிப்பது தொடர்பில் இரு தரப்பினரும் கவனம் செலுத்தியதோடு, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புள்ள போதும் தடையின்றி இந்தப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச நாணய நிதியத்திடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

---

## தேர்தல் நியமனக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசியல் குழுவும் நேற்று வியாழக்கிழமை மாலை இணைய வழியில் கூடி அங்கீகரித்தது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தீர்மானிப்பதற்காகத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்த 11 பேர் கொண்ட தேர்தல் நியமனக் குழுவையே நேற்று அரசியல் குழுவும் அங்கீகரித்தது.

இந்த 11 பேர் கொண்ட குழுவே வடக்கு, கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்யவுள்ளது.

தேர்தல் நியமனக் குழுவில் மாவை சேனாதிராஜா, ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், இரா. சாணக்கியன், த.கலையரசன், ச.குகதாசன். சி.வி.கே.சிவஞானம், கி.துரைராஜசிங்கம், சேயோன், ரஞ்சினி ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

---

## 'பார் பெர்மிட்' பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் சுமந்திரனின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்பதான அரசியல் சூழ்நிலைகள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பன தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பின்னரான, புதிய அரசமைப்பு தயாரிப்பு தொடர்பாகவும், அவர்களது தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி 2015 – 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் வரைபை அமுல்படுத்துதல் தொடர்பாகவும், இந்தச் செயற்பாடுகளில் தமிழர் தரப்பு பிரதிநிதித்துவம் அவசியம் என்பதனையும் சுமந்திரன் வலியுறுத்தினார் .

மேலும், ஊழல் ஒழிப்பு விவகாரங்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் ஜனாதிபதிக்கு தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் முறைகேடாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சிபாரிசின் பேரில் கொடுத்த மதுபான சாலை அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுவதில் தாமதம் ஏற்படுவது மக்கள் மத்தியில் புதிய ஆட்சியாளர்களைக் குறித்த தான சந்தேகத்தையும் ஏற்படுத்துவதனை அவர் சுட்டிக்காட்டியிருந்ததோடு உடனடியாக அந்த அரசியல்வாதிகளின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறும் கோரிக்கை முன்வைத்தார்.

தொடர்ச்சியாக இந்த விடயங்கள் தொடர்பாக தொடர்பாடுவதாகவும், வேண்டிய ஒத்துழைப்பை வழங்குவதாகவும் ஜனாதிபதியிடம் சுமந்திரன் தெரிவித்தார்." – என்றுள்ளது.





# கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் ரத்து!

**(பாறுக் ஷிஹான்)**

கிழக்கு மாகாண பாடசாலைகளில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் மேற்கொள்ளப் பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் பல முறைகேடுகள் இருப்பதாகக் கூறி இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் ப்ரியந்த பெர்னாண்டோ உட்பட பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்கள் கல்முனை மாகாண மேல் நீதிமன்றத்தில் கட்டாணை மனுவைக் கடந்த மே மாதம் தாக்கல் செய்திருந்தனர்.

2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்ற விடயங்களில் ஆசிரியர் இடமாற்ற சபை மற்றும் ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டு சபை ஆகியன சரியாகக் கட்ட மைக்கப்படவில்லை. கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு முரணாக ஆசிரியர் இடமாற்றங்கள் இடம் பெற்றுள்ளன போன்ற காரணங்களைக் கூறி தங்களது இடமாற்றங்களை ரத்து செய்யுமாறு தங்களது மனுவில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த வழக்கு நேற்று (03) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் சார்பில் தோன்றிய கிழக்கு மாகாண சபை சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களதும் இடமாற்றங்களை இரத்து செய்வதாகவும் அவர்கள் இடமாற்றத்திற்கு முன்னர் எந்தப் பாடசாலை களில் கற்பித்தார்களோ அந்தப் பாடசாலைகளில் மீள அமர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்த னர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை கண்டிப்பாக பின்பற்றி இடமாற்றங்கள் செய்வதாகவும் உறுதி அளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இவ்வழக்கைத் தாக்கல் செய்த பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களதும் இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்பட்டன. அவர்களுக்கு உரிய உத்தியோக பூர்வக் கடிதங்கள்எதிர்வரும் நாள்களில் வழங்கப்படவுள்ளன என்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதி அளித்திருந்தனர்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில் சட்டத் தரணிகளான றாஸி முஹம்மட் ஜாபிர் மற்றும் எப். எச்.ஏ. அம்ஜாட் ஆகியோர் தோன்றி காத்திரமான வாதங்களை முன்வைத்திருந்தனர்.

# 39 நாடுகளுக்கான சுற்றுலா விசா கட்டணத்தை இரத்து செய்யும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்

## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

Sri Lanka Tourism Development Authority

39 நாடுகளுக்கான சுற்றுலா விசா கட்டணத்தை இரத்துச் செய்வதற்கான அமைச்சரவை தீர்மானம் கூடிய விரைவில் மீண்டும் அமுல்படுத்தப்படும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் அமைச்சரவை தீர்மானம் தொடர்பான வர்த்தமானியை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதி காரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரி வித்துள்ளார்.

இந்த தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் அனுமதி யின்றி மீள அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதி காரம் உள்ளதா என்பது தொடர்பில் தற்போது ஆராயப் பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.




# விசா பிரச்சினைகள் தொடர்பிலான கணக்காய்வு நடவடிக்கை ஆரம்பம்

நாட்டில் கடந்த சில மாதங்களாக நிலவிய விசா பிரச்சினை தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

புதிய நாடாளுமன்றம் கூடும்போது அது தொடர்பான கணக்காய்வு அறிக்கையை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகம் தொடர்பான கொள்முதல் செயன்முறையின் கணக்காய்வு அறிக்கையை நிறைவுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

விசா விநியோகம் இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட செலவுகள் தொடர்பில் மேற்படி கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - இஸ்ரேல் விமான சேவை இரத்து




இலங்கை மற்றும் இஸ்ரேல் இடையிலான அனைத்து விமான சேவைகளும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஈரானின் தாக்குதல் காரணமாக டெல் அவிவ் விமான நிலையத்தில் விமான சேவைகள் நிறுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முந்தைய நாள்களில் இருநாடுகளுக்கும் இடையே விமானப் பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோர், அதனை பிறிதொரு நாளில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் எதிர்காலத்தில் ஏதேனும் அபாயகரமான சூழ்நிலை ஏற்படுமாயின் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தூதரகம் கூறியுள்ளது.

இயன்றவரை பயணங்களை குறைத்து வீட்டிலேயே இருக்குமாறு இஸ்ரேல் அரசாங்கம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் இடம்பெறும் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்காக நிலத்தடி முகாம்கள், நிலத்தடி வைத்தியசாலைகள் மற்றும் அவசர அம்பியூலன்ஸ் சேவைகளை ஏற்படுத்தியுள்ளதாக இஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சபாநாயகரின் நிலை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

தனது 43 ஆண்டுகால அரசியலைப் பற்றி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்தக் கருத்துக்களைப் பிரதிபலித்த அவர், பல்வேறு சவால்களை எதிர்கொண்ட போதிலும், தனது தொகுதிகளின் நலன்களுக்காகத் தாம் தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டார் எனக் குறிப்பிட்டார்.

கட்சி அரசியலின் தற்போதைய நிலை குறித்து தனது ஆழ்ந்த ஏமாற்றத்தை வெளிப்படுத்திய அவர், அண்மைய மாதங்களில் பல தடவைகள் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கான எண்ணம் கருத்தியலாகத் தன் மனதில் மோதியமையை ஒப்புக்கொண்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய சபாநாயகர் தேர்வாகும் வரை தற்போதைய சபாநாயகர் பதவி நிலையில் நீடிப்பவராகவே கருதப்படுவார்.

தேர்தல் நடந்து புது சபாநாயகர் தேர்வு செய்யப்படும் வரை தற்போதைய சபாநாயகரே அரசமைப்பு கவுன்ஸிலுக்கும் தொடர்ந்து தலைமை தாங்குவார். நாடாளுமன்றத்தின் காவலராக நீடிப்பார்.

அந்த வகையில் தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இப்போதும் பதவியில் இருப்பவராகவே கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் நாடாளுமன்ற அரசியல் வரலாறு பல அற்புதமான - தமது ஆளுமைகளை வெளிப்படுத்திய - சபாநாயகர்களைக் கண்டிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆயினும், அந்த உயர்வான சபாநாயகர்களின் பட்டியலில் தற்போதைய சபாநாயகருக்கு இடமில்லை என்பதும் மறைக்க - மறுக்க - முடியாத உண்மை.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசமைப்பு கவுன்ஸிலின் முடிவை பிழையாக - முற்றிலும் தவறாக - வேண்டும் என்றே பிழையாக - வியாக்கியானம் செய்து, தவறான ஒருவருக்கு பொலிஸ்மா அதிபர் நியமனம் கிட்டுவதற்கு குறுக்கு வழியில் செயல்பட்டவர் இந்த சபாநாயகர் என்ற மாறா அவப்பெயரோடுதான் அவர் இந்தப் பதவியில் இருந்து விலக வேண்டும்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பான விவகாரம் இப்போது உயர்நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையாக இருக்கின்றது. இந்த சபாநாயகரின் குயுக்தித்தனமான விளக்கத்தினால், வரைவிலக்கணத்தினால் - அந்தப் பொலிஸ்மா அதிபர் பதவி, முறையற்ற விதத்தில் - தவறான ஒருவருக்கு வழங்கப்பட்டது. வழக்கு விசாரணை முடிவில் சபாநாயகரின் சின்னத்தனமான - அற்பத்தனமான - செயற்பாடு மோசமாக உயர்நீதிமன்றத்தினால் விமர்சிக்கப்படும் என சட்ட வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

அதுபோலவே இணைய வழி தடுப்புச் சட்ட விடயத்தில் உயர் நீதிமன்ற பரிந்துரைகளைக் கவனத்தில் எடுக்காமல் அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்ற வழி செய்தமை மூலம் நாடாளுமன்ற வரலாற்றில் மிக மோசமான தவறு இழைத்த சபாநாயகர் என்ற அவப்பெயரோடுதான் அவர் இந்தப் பதவியை விட்டு விலக வேண்டியவராக இருக்கிறார்.

சபாநாயகர் பதவிக்கு மதிப்பும் மாண்பும் பெற்றுத் தராத மஹிந்த யாப்பா அபேவர்தன, தொடர்ந்து அரசியலில் நிற்காமல் விலகிப் போவது குறித்து யாரும் அதிகம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை என்பதுதான் அவரது அரசியல் நிலைமையாகும்.

# காங்கிரஸ் கட்சியினால் ஒருபோதும் நிலையான ஆட்சியை வழங்க முடியாது

## பிரதமர் மோடி தெரிவிப்பு



“காங்கிரஸ் கட்சியால் ஒருபோதும் நிலையான ஆட்சியை வழங்க முடியாது. ஒருபோதும் நாட்டை வலிமையாக்க முடியாது.”

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் நேற்று நிறைவடைவதை ஒட்டி, பிரதமர் மோடி அம்மாநில மக்களுக்கு தனது எக்ஸ் பக்கத்தின் மூலம் விடுத்துள்ள செய்தியில்,

“ஹரியானா சட்டசபை தேர்தலுக்கான பிரசாரம் இன்னும் சிறிது நேரத்தில் முடிவடைய உள்ளது. கடந்த சில நாளகளாக மாநிலம் முழுவதும் பயணம் செய்தேன். மக்கள் மத்தியில் நான் கண்டுள்ள உற்சாகத்தைப் பார்க்கும்போது, ஹரியானா மக்கள் மீண்டும் பா.ஜ.கவுக்கு ஆசி வழங்கப் போகிறார்கள் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. காங்கிரஸின் பிளவுபடுத்தும் மற்றும் எதிர்மறையான அரசியலை தேசப்பற்றுள்ள ஹரியானா மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஹரியானா மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த கடந்த 10 ஆண்டுகளில் பா.ஜ.க. பல்வேறு பணிகளை ஆற்றி உள்ளது. அனைத்து பிரிவினரின் நலனுக்கும் முன்னுரிமை அளித்துள்ளோம். விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், கிராமங்கள் மற்றும் நகரங்களின் வளர்ச்சி என எதையும் நாங்கள் விட்டுவிடவில்லை. காங்கிரஸின் ஊழல்களில் இருந்தும், கலவரங்களின் சகாப்தத்தில் இருந்தும் ஹரியானாவை வெளியே கொண்டு வந்துள்ளோம்.

காங்கிரஸ் என்றால் ஊழல், சாதி வெறி, வகுப்புவாதம் மற்றும் குடும்ப அரசியல் என்பது ஹரியானா மக்களுக்கு தெரியும். காங்கிரஸ் அரசியலின் அடிப்படை நோக்கம் சுயநலம் மட்டுமே. காங்கிரஸ் என்றால் தரகர்கள் மற்றும் மருமகன்களின் அணிசேர்க்கை என்று பொருள். இன்று இமாச்சல் முதல் கர்நாடகம் வரையிலான காங்கிரஸ் ஆட்சியின் தோல்வியை மக்கள் பார்க்கிறார்கள். காங்கிரஸின் கொள்கைகள் மக்களை அழிக்கின்றன, அதனால்தான் ஹரியானா மக்கள் காங்கிரஸை விரும்பவில்லை.

காங்கிரஸால் ஒருபோதும் நிலையான ஆட்சியை வழங்க முடியாது என்பது ஹரியானா மக்களுக்கு தெரியும். காங்கிரஸ் தலைவர்கள் தங்களுக்குள் எப்படி சண்டை போடுகிறார்கள் என்பதை ஹரியானா மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருக்கும்போது இதுதான் நிலைமை. டெல்லி மற்றும் ஹரியானாவில் உள்ள இரண்டு குடும்பங்களின் செயல்பாடுகளால் ஒட்டுமொத்த ஹரியானாவும் அவமானப்படுத்தப்படுவது ஹரியானா மக்களை வேதனைப்படுத்துகிறது.

இன்று ஒட்டுமொத்த உலகத்தின் பார்வையும் இந்தியாவை நோக்கி உள்ளது. உலகமே இந்தியாவை மிகுந்த நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் பார்க்கிறது. அத்தகைய சூழ்நிலையில், ஹரியானா மக்கள் இந்தியாவை வலுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும் ஓர் அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானது. காங்கிரஸால் ஒருபோதும் நாட்டை வலிமையாக்க முடியாது. எனவே, எனது ஹரியானா வாக்காளர்கள் மீண்டும் பா.ஜ.கவுக்கு ஆசி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.” – என்றார்.

## திருப்பதி லட்டு விவகாரம்:

# விரதத்தை முடித்தார் நடிகர் பவன் கல்யாண்





திருப்பதி லட்டு பிரசாதத்தில் கடந்த ஜெகன்மோகன் ஆட்சி காலத்தில் விலங்குகளின் கொழுப்பு, மீன்எண்ணை போன்றவை கலப்படப்படம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது எனும் குற்றச்சாட்டை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வைத்தார்.

இதனை தொடர்ந்து, ஏழுமலையானுக்கு களங்கம் வந்து விட்டதால் பிராயச்சித்த விரதத்தை மேற்கொள்வேன் என துணை முதல்வர் பவன் கல்யாண் அறிவித்ததோடு, கடந்த மாதம் விரதத்தையும் தொடங்கினார். தொடர்ந்து 11 நாள்கள் வரை விரதம் இருந்த அவர், நேற்று முன்தினம் திருப்பதிக்கு சென்றார்.

அதன் பின்னர் அவர் அலிபிரி பாதையில் நடந்தே திருமலைக்கு சென்றடைந்தார். இரவு திருமலையில் தங்கிய அவர் நேற்று முன்தினம் காலை தனது 2 மகள்களுடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார்.

அப்போதும் தான் கொண்டுசென்ற வாராஹி நம்பிக்கை பத்திர புத்தகத்தை ஏழுமலையானின் பாதங்களில் வைத்து சிறப்பு பூஜைகளும் செய்யப்பட்டது.

இந்நிலையில், திருப்பதியில் நடைபெறும் வாராஹி பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் இந்த புத்தகம் என்ன என்பது குறித்து துணை முதல்வர் பவன் கல்யாண் அறிவிக்க உள்ளார்.

# லெபனானுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கை; மேலும் பல கிராமங்களைக் கைப்பற்றும் இஸ்ரேல்







லெபனானுக்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ள இஸ்ரேல் மேலும் பல கிராமங்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

லெபனான் – பெய்ரூட்டின் தென்பகுதியில் உள்ள பல நகரங்கள் மற்றும் கிராமங்களில் வசிக்கின்ற மக்களை வடக்கு நோக்கி நகருமாறு இஸ்ரேலின் பாதுகாப்புப் படையினர் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 14 பேர் காயமடைந்துள்ளனர். இந்த பகுதியில் இஸ்ரேலிய துருப்பினரும் ஹெஸ்புல்லா போராளிகளும் நேருக்கு நேர் சண்டையிடுகின்றனர்.

ஹெஸ்புல்லாவின் தாக்குதல்களில் 8 இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், அங்கிருந்து எவரும் தப்பிச் செல்லும் வாய்ப்பு அற்றுப் போய் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெய்ரூட்டில் ஹெஸ்புல்லா அமைப்பினர் தங்கி இருப்பதாகக் கருதப்படும் கட்டடம் ஒன்றை இலக்கு வைத்தே தாக்குதல்கள் நடத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது.

எனினும் அங்கு முக்கியமான மருத்துவ முகாம் ஒன்றும் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் உள்ள டாஹியேவும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது. இது ஹெஸ்புல்லா அமைப்பின் பாதுகாப்பு தளம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சிங்கப்பூர் முன்னாள் அமைச்சர் ஈஸ்வரனுக்கு சிறைத் தண்டனை





லஞ்சம் பெற்ற குற்றத்துக்காக சிங்கப்பூரின் முன்னாள் அமைச்சர் எஸ். ஈஸ்வரனுக்கு ஓராண்டுக்காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் எஸ். ஈஸ்வரன் மீதான 4 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட நிலையில், அவருக்கான தண்டனையை நேற்று சிங்கப்பூர் நீதிமன்றம் வழங்கியது.

அவர் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த காலப்பகுதியில், பல்வேறு வர்த்தகர்களிடம் இருந்து ப்ரீமியர் லீக் உதை பந்து தொடர், ஐரோப்பிய இசை நிகழ்ச்சி போன்றவற்றுக்கான அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அவற்றின் பெறுமதி 3 லட்சம் அமெரிக்க டொலர்களாகும். இது தொடர்பான குற்றச்சாட்டு கடந்த ஜனவரி மாதம் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட போது, அவர் பதவியிலிருந்து விலகினார்.

உலகில் ஊழல்கள் குறைந்த முதல் 5 நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் சிங்கப்பூரில் கடந்த 1986ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு இவ்வாறான குற்றச்சாட்டின் கீழ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்பின்னர் முதல் தடவையாகத் தற்போது முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு மோசடி குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கேட்ஸ் மன்ற சுயாதீன ஆலோசகர் ஜனாதிபதி செயலாளருடன் சந்திப்பு

கேட்ஸ் மன்றத்தின் சுயாதீன ஆலோசகர் சந்தித்த சமர நாயக்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

சிறுதேயிலை உரிமையாளர்களை இலக்கு வைத்து செயற்படுத்தப்படும் டிஜிட்டல் விவசாய பரிமாற்ற திட்ட முன்னேற்றம் மற்றும் இலங்கையில் போஷாக்கின்மை நெருக்கடிக்கு எதிர்கொள்வதற்காக திட்டமிட்டுள்ள பாடசாலை உணவு வழங்கல் திட்டம் என்பன குறித்து இந்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டது.

டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதி, கால்நடை வளர்ப்பு, காலநிலை மாற்றம் தொடர்பான ஒத்துழைப்பு குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் கேட்ஸ் மன்றத்திற்கும் இடையிலான கூட்டுச் செயற்பாடுகளை முறைப்படுத்துவது தொடர்பில் விரைவில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாட கேட்ஸ் மன்றத்தின் தலைவர் எதிர்பார்ப்பதாகவும் மன்றத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

# புதிய செயலாளரானார் எஸ். ஆலோக பண்டார



உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சின் புதிய செயலாளராக எஸ்.ஆலோக பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று வழங்கபட்டது.



# இலங்கை அபிவிருத்திக்கு நிதியுதவி கொரியாவின் எக்ஸிம் வங்கி இணக்கம்

இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க கொரிய எக்ஸிம் வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

கொரிய எக்ஸிம் வங்கியின் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார ரீதியிலானபயனுள்ள வேலைத்திட்டங்களுக்கு, நிதியுதவி வழங்குவதற்கு தாங்கள் எதிர்பார்ப்பதாகக் கொரிய எக்ஸிம் வங்கி பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர்.



# குழந்தைகளுக்காக விசேட பிறப்புச் சான்றிதழ் திட்டம்

பிறப்புச் சான்றிதழ் இல்லாத குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் சான்றிதழ்களை வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களினால் இந்த மாதம் முழுவதும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படும்.




இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களுக்கு ஒக்டோபர் மாதம் முழுவதும் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என அரசாங்க தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.



# நெல்லியடியில் புடவைக் கடைக்கு தீ வைத்த வன்முறைக் கும்பல்!

யாழ்ப்பாணம், வடமராட்சி, நெல்லியடிப் பகுதியில் உள்ள புடவைக் கடை ஒன்றுக்கு வன்முறைக் கும்பலினால் தீ வைக்கப்பட்டதில், கடையில் இருந்த பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

நெல்லியடி சந்தைக்கு அண்மையில் உள்ள புடவைக் கடைக்குள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு மூவர் அடங்கிய வன்முறைக் கும்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து அங்கிருந்த ஆடைகள் மீது பெற்றோலை ஊற்றி தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

தீ வேகமாகப் பரவியதில் அங்கிருந்த பெறுமதியான ஆடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

அதேவேளை, கடந்த வாரம் அந்தப் புடவைக் கடைக்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் ஆடைகளுக்குப் பெற்றோல் ஊற்றி தீ வைக்க முற்பட்ட வேளை கடையில் நின்றவர்கள் சுதாகரித்துக் கொண்டு அவர்களைப் பிடிக்க முற்பட்ட வேளை அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர். இந்நிலையில் மீண்டும் நேற்றுமுன்தினம் வன்முறைக் கும்பல் அந்தப் புடவைக் கடைக்குத் தீ வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிராம சேவையாளரை இடமாற்ற வேண்டாம்!

## நாவற்காடு மக்கள் போராட்டம்







கிராம உத்தியோகத்தரை இடமாற்ற வேண்டாம் எனக் கோரி யாழ். தென்மராட்சி, வரணி – நாவற்காடு பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாவற்காடு கிராம அலுவலராக கந்தசாமி தர்மேந்திரா என்பவர் கடமையாற்றி வந்தார். அவர் நாவற்காடு பிரதேசத்துக்கு கிராம அலுவலராக நியமனம் பெற்று 6 மாதங்கள் பூர்த்தியாகாத நிலையில் அவருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி பிரதேச செயலாளரை மக்கள் சந்தித்திருந்தனர். எனினும், மக்களின் கோரிக்கைக்குப் பிரதேச செயலாளரால் உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் பிரதேச மக்கள் இணைந்து தீர்வு கோரி நேற்று நாவற்காடு பொது மண்டபத்தில் அமைந்துள்ள கிராம அலுவலகத்தின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பொதுஜன பெரமுனவுடன் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 40 தொகுதி அமைப்பாளர்களை இம்முறை பொதுத் தேர்தலில் களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் திசர குணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர் என கட்சியின் உப தவிசாளர் சட்டத்தரணி கீர்த்தி உடவத்த கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசாரச் செயலாளர் திசர குணசிங்க குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 பேர் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளனர் எனவும் இளம் சமுதாயத்தின் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை அளித்து அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எலிக்காய்ச்சல் அபாயம் சுகாதாரத் துறை அறிக்கை




நாட்டில் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 7500 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சலால் மரணிப்பவர்களின் வீதம், டெங்கு நோயாளர்களின் உயிரிழப்பு வீதத்தை தாண்டியுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமிந்த முத்துகுட தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -04.10.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின்உடல்நலத்துக்காகச்செலவுசெய்யநேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்றுபணிகள்இறுக்கமாககாணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -04.10.2024




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தூக்கமின்மை மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி காணப்படும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




